# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2032/2 - 2017 අගෝස්තු මස 14 වැනි සඳුදා - 2017.08.14

*2032/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*நிபந்தனை அடிப்படையில் வரிவிலக்களிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை அகற்றுவதற்காக சுங்கப் பெறுமதியைக் கணிப்பீடு செய்தல்*

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் " உ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 101 (1) (ஏ) பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், மீள் ஏற்றுமதி செய்யும் அடிப்படை என்ற நிபந்தனை உட்பட நிபந்தனை அடிப்படையில் தொடர்புடைய வரிவிலக்களிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் கீழ் 2015, நவெம்பர் 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான வாகனங்களை அகற்றுவதற்காக சுங்கப் பெறுமதியைக் கணிப்பீடு செய்வதற்கான கட்டளையை இதன் மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*2. இயைபுமுறை குறியீட்டுத் தலைப்பு இலக்கம் 87.02 மற்றும் 87.03 இன் கீழ் வகைப்படுத்தக் கூடிய வாகனமொன்றின் சுங்கப் பெறுமதியை அதனை இறக்குமதி செய்த சந்தர்ப்பத்தில் CIF பெறுமதியின் அடிப்படையில் அதனை இறக்குமதி செய்யப்பட்ட காலத்திற்கும் அகற்றப்பட்ட காலத்திற்கும் இடையிலான காலத்தில் பயன்படுத்தப்பட்ட காலம் என்ற அடிப்படையில் கீழே அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள விதமாக தீர்மானிக்க முடியும்.*

1 A - PG 3667- 157 (2017/ 08)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

நிபந்தனை அடிப்படையில் வரிவிலக்களிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான, இயைபுமுறை குறியீட்டுத் தலைப்பு இலக்கம் 87.02 மற்றும் 87.03 இன் கீழ் வகைப்படுத்தக்கூடிய வாகனங்களை அகற்றுவதற்கான சுங்கப் பெறுமதி.

| இறக்குமதி செய்யப்பட்ட தினத்திலிருந்து வாகனம் பயன்படுத்தப்பட்ட காலம் | பெறுமதி CIF |
|---|---|
| 01 வருடத்திற்கு சமமானவை அல்லது அதற்குக் குறைந்தவை | 100% |
| 01 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 02 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 90% |
| 02 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 03 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 80% |
| 03 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 04 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 70% |
| 04 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 05 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 60% |
| 05 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 06 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 50% |
| 06 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 07 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 40% |
| 07 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 08 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 30% |
| 08 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 09 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 20% |
| 09 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 10 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 15% |
| 10 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 11 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 10% |
| 11 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 12 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 05% |
| 12 வருடத்திற்குக் கூடுதலான | 01% |

3. இயைபுமுறைக் குறியீட்டுத் தலைப்பு இலக்கம் 87.01, 87.04 மற்றும் 87.05 இன் கீழ் வகைப்படுத்தக் கூடிய வாகனமொன்றின் சுங்கப் பெறுமதியை, அந்த வாகனத்தை இறக்குமதி செய்த சந்தர்ப்பத்திலுள்ள CIF பெறுமதியின் அடிப்படையில் அதனை இறக்குமதி செய்யப்பட்ட காலத்திற்கும் அகற்றப்பட்ட காலத்திற்கும் இடையிலான காலத்தில் பயன்படுத்தப்பட்ட காலம் என்ற அடிப்படையில் கீழே அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள விதமாக தீர்மானிக்க முடியும்.

**அட்டவணை II**

நிபந்தனை அடிப்படையில் வரிவிலக்களிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான, இயைபு முறை குறியீட்டுத் தலைப்பு இலக்கம் 87.01, 87.04 மற்றும் 87.05 இன் கீழ் வகைப்படுத்தக் கூடிய வாகனங்களை அகற்றுவதற்கான சுங்கப் பெறுமதி.

| இறக்குமதி செய்யப்பட்ட தினத்திலிருந்து வாகனம் பயன்படுத்தப்பட்ட காலம் | பெறுமதி CIF |
|---|---|
| 01 வருடத்திற்கு சமமானவை அல்லது அதற்குக் குறைந்தவை | 100% |
| 01 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 02 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 90% |
| 02 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 03 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 80% |
| 03 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 04 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 60% |
| 04 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 05 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 40% |
| 05 வருடத்திற்கு கூடுதலான மற்றும் 06 வருடத்திற்குக் குறைந்த அல்லது சமமானவை | 20% |
| 06 வருடத்திற்கு கூடுதலான | 10% |

4. மீள் ஏற்றுமதி செய்யும் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான வாகனங்கள் என்பது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட வாகனங்களாகக் காணப்படுகின்ற அதேவேளையில், அது CARNET திட்டத்தின் கீழ் அல்லது ஏனைய எந்தவொரு சமனான திட்டத்தின் கீழ் தற்காலிக அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனமல்லாத அதே வேளை மீள் ஏற்றுமதி செய்யும்

அடிப்படையின் மீது இறக்குமதி செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட வாகனமொன்றை அகற்றுவது, பின்வரும் விடயங்களுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படும்.

(அ) மேற்குறிப்பிட்ட வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட விசேட கருத்திட்டம் முடிவடைதல்.

(ஆ) மேற்குறிப்பிட்ட வாகனத்தை அகற்றுவதற்காக விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்படல் வேண்டும்.

(இ) வாகனத்தை அகற்றுவதற்கான கோரிக்கைக்கு திறைசேரியின் /நிதி அமைச்சின் (வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்) செயலாளரினால் அனுமதியளிக்கப்பட வேண்டிய அதேவேளையில், அதனை சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

5. இந்தக் கட்டளைகளின் நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட திகதி, தொடர்புடைய வாகனத்தை இந்நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட விலைப்படியலின் (CUSDEC) இல் குறிப்பிடப்பட்ட திகதி) திகதியாக காட்டப்படுகின்றது.

6. அத்தகைய வாகனங்களை அகற்றும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய அரசிறை அறவீடுகள், அத்தகைய வாகனங்களை இறக்குமதி செய்த திகதியில் காணப்பட்ட வரி வீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2017, ஓகத்து 11.

09 - 141